[1992 பிப்ரவரி 4

34—

## ஆண்டிப்பட்டியில் நுகர்பொருள் வாணிபக் கழக சேமிப்புக் கிடங்கு.

*793—திரு. கே. தவசி :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆண்டிப்பட்டியில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆண்டிப்பட்டியில் அப்படிப்பட்ட யோசனை ஏதும் இல்லை. ஆகவே, (ஆ) மற்றும் (இ) வினாக்களுக்கு இடமில்லை.

திரு. கே. தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் 1987-ம் வருட துவக்கத்தில், தம்முடைய தொகுதி மக்களுக்கு அங்கே பல்வேறு சமுதாய நலத் திட்டங்களை துவக்கி வைக்கின்ற போது, 1—1—1987 ஆம் தேதி, அந்த மக்களின் அடிப்படை வசதியான உணவை—அந்தப் பகுதியில் மலைவாழ் மக்கள் மிகுதியாக வாழ்கிறார்கள்—நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் எடுத்துச் செல்கின்ற அந்தப் பொருள்களை தேனி போன்ற ஊர்களிலிருந்து கொண்டு செல்கிற சூழ்நிலை இருப்பதால், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் விட்டுச் சென்ற பணியை நிறைவேற்றுகின்ற நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில், வருங்காலத்திலாவது இது நிறைவேற்றப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டியில் கிடங்குகள் இல்லையென்று சொன்னாலும், ஆண்டிப்பட்டி உள்ளடங்கிய உசிலம்பட்டி வட்டத்திலே, உசிலம்பட்டியிலேயே 1,300 டன் கொள்ளளவு கொண்ட ஒரு சேமிப்புக் கிடங்கு உள்ளது. ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே தேவை இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். கேட்பவர்களுக்கு இல்லை என்று சொல்வது புரட்சித்

1992 பிப்ரவரி 4]

தலைவியின் ஆட்சியில் இல்லை. எனவே, இந்தக் கோரிக்கை பரிவோடு பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 35, திருமதி வி. ஜி. மணிமேகலை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

35—

அருப்புக்கோட்டையில் சென்ட் தொழிற்சாலை

* 4520—திருமதி வி. ஜி. மணிமேகலை:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அருப்புக்கோட்டை தொகுதியில் மல்லிகை அதிகமாக விளைவதால் அதைப் பயன்படுத்தி சென்ட் தொழிற்சாலை தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி வி. ஜி. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்கின்ற பேச்சுக்கே இடம் இல்லை என்கின்ற வகையிலே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்தியா சுதந்திரம் அடைந்து விட்டது என்றாலும், பெண்கள் சுதந்திரத்தை முழுமையாக அனுபவிக்கவில்லை என்பதை உணர்ந்து பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற வகையிலே, பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று முழு மூச்சோடு இறங்கி இருக்கின்ற இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லையென்று கூறுகிறார்கள். அதை அடுத்த முறையாவது நிறைவேற்ற, ஒரு தொழிற்சாலை அமைத்துக் கொடுக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி மகளிருக்கு முக்கியத்துவம் கொடுக்கிற கேள்வி அல்ல. ஓர் ஊரில் தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றிக் கேட்டிருக்கிறீர்கள்.